செய்தி வெளியீடு எண் : 2144 நாள் : 27.10.2023

**ரூ.85.56 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருநெல்வேலி சந்திப்பு, பெரியார் பேருந்து நிலையம் மறுசீரமைப்பு பணி மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு**

திருநெல்வேலி சந்திப்பு அருகே உள்ள பெரியார் பேருந்து நிலையம் மறுசீரமைப்பு பணி மற்றும் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கம், கீழநத்தம் பகுதியில் அமைந்துள்ள நீச்சல் குளம் ஆகியவற்றை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (27.10.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**பின்னர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்:–**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, சட்டமன்ற தொகுதிக்கு ஒரு நூலகம் அமைத்து வருகிறோம். இதன் தொடர்ச்சியாக, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சட்டமன்ற தொகுதிக்கான நூலகம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் எண்ணற்ற விளையாட்டு வீரர்களை உருவாக்கிய பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கத்தில் இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கேலரி – தடகள ஓடுதளம் உள்ளிட்ட வசதிகளை பார்வையிட்டு அவற்றை முறையாக பராமரிக்க வேண்டுமென விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிகாரிகளிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து, கீழநத்தம் பகுதியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருநெல்வேலி பிரிவிற்குட்பட்ட 50மீ பந்தய நீச்சல் குளம் பார்வையிடப்பட்டது. 50மீ பந்தய நீச்சல் குளத்திற்கு சீரமைப்பு பணிகள் மற்றும் வர்ணம் அடிக்கும் பணிகளுக்கு ரூபாய் 10.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் அடிப்படையில், சீரமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சீரமைக்கும் பணிகள் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நவம்பர் 2023 முதல் வாரத்தில் வரும் என மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், திருநெல்வேலி சந்திப்பு பெரியார் பேருந்து

நிலையம் மறுசீரமைப்பு பணி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த பேருந்து நிலையமானது 4.27 ஏக்கர் பரப்பளவில் 4– வது ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ரூ.85.56 கோடி மதிப்பில் மறுசீரமைப்பு பணி நடைபெற்று வருகிறது. இப்பேருந்து நிலையத்தில் முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் வணிக பயன்பாட்டிற்கும், தரைத்தளத்தில் காத்திருப்போர் கூடம், உணவகம், காவல் அறை, மருத்துவ மையம், சி.சி.டி.வி அலுவலகமும், கீழ்த்தளத்தில் இரண்டு சக்கர வாகனம் மற்றும் 4 சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகிறது. 94 சதவீதம் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணிகள் நவம்பர் 2023 இறுதியில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆய்வின் போது, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சா.ஞானதிரவியம் அவர்கள், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.அப்துல் வகாப் அவர்கள், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் திரு.பி.எம்.சரவணன் அவர்கள், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலர் திரு.தாரேஸ் அகமது, இ.ஆ.ப., அவர்கள், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் திரு.தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், இ.ஆ.ப., அவர்கள், துணை மேயர் திரு.கே.ஆர்.ராஜு அவர்கள், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் மற்றும் அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in